මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/40/2024
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2024.12.24

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல. : 05/2024**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு /நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**2025 வாக்குப் பதிவுக் கணக்கின் அடிப்படையில் செலவினங்களைச் செய்வதற்கான அங்கீகாரம்**

2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை 2025 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களுக்கான அரசாங்க செலவினங்களைத் தீர்ப்பதற்குத் தேவையான வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வாக்குப் பதிவுக் கணக்கு 2024.12.06 அன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

02. மாண்புமிகு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் வாக்குப் பதிவுக் கணக்கு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி செலவினங்களை மேற்கொள்வதற்கு இயலுமானவகையில் ஆணைப்பத்திரங்களில் முறையாக கையொப்பமிட்டுள்ளார். அதன்படி, பணம் செலுத்தும் வவுச்சர்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களில் குறிப்பிடப்பட வேண்டிய ஆணைப்பத்திர இலக்கங்கள் பின்வருமாறு இருக்கும்;

| | |
|---|---|
| 2025 இன் 1 ஆம் இலக்க ஆணைப்பத்திரம் (வாக்குப் பதிவுக் கணக்கு) | - பொதுச் சேவைகளுக்கு |
| 2025 இன் 1 ஆம் இலக்க விசேட சட்ட ஆணைப்பத்திரம் (வாக்குப் பதிவுக் கணக்கு) | - விசேட சட்ட சேவைகளுக்கு |
| 2025 இன் 1 ஆம் இலக்க முற்பண ஆணைப்பத்திரம் (வாக்குப் பதிவுக் கணக்கு) | - முற்பணக் கணக்குச் செயற்பாடுகளுக்கு |

03. அந்தந்த நிறுவனம் தொடர்பான பொருள்களின் விரிவான செலவின மதிப்பீடுகள், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் உரிய காலத்தில் உங்களுக்கு வழங்கப்படும்.

04. வாக்குப் பதிவுக் கணக்கு தொடர்பான விரிவான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் தற்போது ITMIS முறைமையில் உள்ளிடப்பட்டுள்ளன. வாக்குப் பதிவுக் கணக்கு நடைமுறையில் இருக்கும் காலக்கட்டத்தில் அந்த மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்கு இணங்க அந்தந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய செலவினங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

05. செலவின வரையறைகள் மற்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் வரையறைகளைக் குறிப்பதற்கு அட்டவணை 01 மற்றும் 02 என்பன இங்கு இணைக்கப்பட்டுள்ளது.

06. அரச அலுவலர்களின் முற்பண "பி" கணக்கின் கீழ் கடன் வசதிகளை வழங்கும்போது பண்டிகை முற்பணம் மற்றும் சிறப்பு முற்பணம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அனைத்து அலுவலர்களுக்கும் பண்டிகை முற்பணம் மற்றும் சிறப்பு முற்பணங்களை ஒதுக்கீடு செய்த பிறகு, செலவின வரையறைக்குள் மேலும் மீதி இருந்தால் மட்டுமே இடர் கடன்கள் வழங்க முடியும்.

07. அட்டவணைகள் 1 மற்றும் 2 என்பன தொடர்பாக தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் உங்களுக்கு வழங்கப்பட்ட விரிவான மதிப்பீடுகளின் அடிப்படையில் வாக்குப் பதிவுக் கணக்கு நடைமுறையில் இருக்கும் காலப்பகுதியில் தேவைப்படும் கட்டுநிதிகளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை திறைசேரி மேற்கொள்ளும். இந்தச் செயன்முறைக்குள் 2025 ஆம் ஆண்டின் முதல் 04 மாதங்களுக்கான கட்டுநிதி வரையறையினை எவ்வாறு கணக்கிடுவது என்பது குறித்து எதிர்காலத்தில் அறிவுறுத்தல்களை வழங்க திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

08. வாக்குப் பதிவுக் கணக்கிலிருந்து செலவு செய்வதற்கான அனுமதி, 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் நோக்கங்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதுடன் 2025 ஆம் ஆண்டு வரை தொடர வேண்டும். எவ்வாறாயினும், அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு இணங்க, வாக்குப் பதிவுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற வேண்டும். வாக்குப் பதிவுக் கணக்கு நடைமுறையில் இருக்கும் காலக்கட்டத்தில், புதிய செயற்பாடுகள் தொடர்பாக அர்ப்பணிப்புகளைச் செய்யக்கூடாது.

09. வாக்குப் பதிவுக் கணக்குகளில் முழு அளவிலான நிதிஏற்பாடுகள் சேர்க்கப்படவில்லை என்றாலும், பெறுகை நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கும் கருத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அது தடையாக இருக்கக்கூடாது. இதனால் தேவையான அங்கீகாரம் கிடைத்துள்ள தற்போது நடைமுறையிலுள்ள கருத்திட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவுசெய்ய முடியும்.

10. மேலும், அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் தனிப்பட்ட முறையில் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகள் குறித்து கவனம் செலுத்துவதுடன், சிக்கனமான முறையில், பொது நிறுவனங்களின் செலவினங்களை குறைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

**ஒப்பம்/-**
**கே.எம். மஹிந்த சிறிவர்தன**
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் :

(i) சனாதிபதியின் செயலாளர்
(ii) பிரதமரின் செயலாளர்
(iii) அமைச்சரவையின் செயராளர்
(iv) கணக்காய்வாளர் நாயகம்
(v) செயலாளர், நிதி ஆணைக்குழு